Deposition of witness
(Chapter XXIII Code of Criminal Procedure
District Munsif cum Judicial Magistrate Court, Alangudi.
CC No. 146/18

**Deposition of P.W.2**

| | | |
|---|---|---|
| Name | : | செல்வராஜ் |
| Father’s Name | : | ஆவுடை |
| Village | : | நம்பிவயல் |
| Taluk | : | பட்டுக்கோட்டை |
| Caste | : | |
| Calling | : | விவசாயம் |
| Religion | : | இந்து |
| Age | : | **65/2022** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 29.04.2022**

**முதல் விசாரணை**

நான் தற்போது நம்பிவயல் கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 என் மகள் ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும். 1ம் எதிரி புண்ணிமூர்த்திக்குதான் என் மகள் ராணியை திருமணம் செய்து கொடுத்தோம். கடந்த 17.06.2007ம் தேதி ஊரணிபுரம் கே.ஆர் அம்சவள்ளி திருமண மண்டபத்தில் திருமணம் சீர்வரிசைகளுடன் நடைபெற்றது. சென்னையில் குடும்பம் நடத்தி வந்தார்கள். என் மகளின் 15 பவுன் நகைகளை அவரது பெயரில் அடகு வைத்துவிட்டார். குழந்தை இல்லை என கூறி அ.சா.1ஐ துன்புறுத்தினார். பணம்கேட்டு தொந்தரவு செய்தார். 2012ல் சென்னையில் குடும்பநல நீதிமன்றத்தில் விவாகரத்து 1ம் எதிரி தாக்கல் செய்தார். அந்த மனு எண் 1863/2012 என்ற அந்த வழக்கை உயர்நீதிமன்றத்தில் நாங்கள் மனு செய்து பட்டுக்கோட்டை சார்பு நீதிமன்றத்திற்கு மாறுதல் பெற்று மனு எண் 3/2015 வழக்கு எடுக்கப்பட்டு மனு தள்ளுபடி செய்யப்பட்டது. அதன்பிறகு தஞ்சாவூர் அமர்வு நீதிமன்றத்தில் மேல்முறையீடு நிலுவையில் இருந்தபோது 08.12.2016ம்தேதி எங்களை ஆஜராக அழைப்பாணை வந்தது. எதிரி ஆஜராகாததால் அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு தற்போது மீண்டும் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. அதன் எண் 50/2018 ஆகும். 1ம் எதிரி 05.12.2016ம் தேதி சோலையன்திரபுரம் குடிக்காடு கிருஷ்ணமூர்த்தி லீலா என்பவரை 2ம் திருமணம் செய்துகொண்டார். அதனால் என் மகள் ராணி இதுசம்மந்தமாக ஆலங்குடி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் கு.வி.**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.